**செய்தி வெளியீடு எண்: 224** **நாள்: 12.04.2013**

செய்தி வெளியீடு

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு சிறந்த தமிழ் நூல்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் போட்டிக்கு வரப்பெறும் நூல்களில் சிறந்த நூல்களைத் தேர்வு செய்து அந்நூல்களை எழுதிய ஆசிரியர்கள் மற்றும் பதிப்பித்த பதிப்பகத்தார்களை ஊக்குவிக்க பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. அதன்படி 2011–ஆம் ஆண்டு வெளி வந்த நூல்களில் 28 வகைப்பாடுகளில் சிறந்த நூல்கள் தெரிவு செய்யப்பட்டு 28 நூல்களுக்கான ஆசிரியர்கள் மற்றும் அந்நூல்களை பதிப்பித்த 22 பதிப்பகத்தாருக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நூலாசிரியர் ஒவ்வொருவருக்கும் ரூ.30,000/–மும், பதிப்பகத்தாருக்கு நூல் ஒன்றுக்கு ரூ.10,000/–மும் பரிசாக வழங்கப்படும். பரிசு பெற தேர்வு செய்யப்பட்ட நூல்கள், நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தார்களின் விவரம் இணைப்பு–1 ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் 1330 குறட்பாக்களை முற்றோதல் செய்யும் மாணவ மாணவியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு திருக்குறள் ஒப்புவித்த 36 மாணவ மாணவியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/– மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பரிசு பெற தேர்வு செய்யப்பட்டுள்ள மாணவ மாணவியர்களின் விவரம் இணைப்பு–2ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் மாநில அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 18 மாணவ மாணவியர்களுக்கு முதல் பரிசாக ரூ.15,000/–, இரண்டாம் பரிசாக ரூ.12,000/–, மூன்றாம் பரிசாக ரூ.10,000/– மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களின் விவரம் இணைப்பு–3ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**

- - - - - -